ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2413/40 - 2024 දෙසැම්බර් මස 04 වැනි බදාදා - 2024.12.04

2413/40 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது தொடர்பு இல.: DSM/YT/LAND/5/65.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 4-3/24/2022/HA/09.

பமுணுவ கிராம அலுவலர் பிரிவின் கிராம செயலக காரியாலயத்தினை நிர்மாணிப்பதற்காக காணியின் ஒரு பகுதியினை எடுத்துக்கொள்வதற்கு அவசியமான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தின் யடவத்த பிரதேச செயலாளர் பிரிவின் அஸ்கிரி உடசிய பத்துவ எனும் சிறு பிரிவின் இல. E339, பமுணுவ கிராம அலுவலர் பிரிவின் பமுணுவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் நில அளவை வரைபட இல. 310420 இன் துண்டு இல. 01 இல் குறிப்பிடப்பட்ட வெதியன்பிடிய ஹேன, ஹபுகஹமுல பிடிய, வெதகார கெதர பஹல வத்தை 0.1595 ஹெக்டயார் விஸ்தீரணத்தினைக் கொண்ட காணியின் விபரங்கள் பின்வருமாறு :

01. துண்டு இல. 01
காணியின் பெயர் : வெதியன்பிடிய ஹேன, ஹபுகஹமுல பிடிய, வெதகார கெதர பஹல வத்தை; விபரம் : பமுணுவ கிராம அலுவலர் பிரிவின் கிராம செயலக காரியாலயத்தினை நிர்மாணிப்பதற்காக காணியின் ஓர் பகுதியினை எடுத்தல்; உரிமை கோருவோர் : 1. கோணார முதியன்சேலாகே திஸ்ஸ பமுணுவ, 2. கோணார முதியன்சேலாகே இந்திரவங்ச பமுணுவ, 3. கோணார முதியன்சேலாகே சுவர்ணா பமுணுவ, 4. கோணார முதியன்சேலாகே அசோக பமுணுவ; விலாசம் : வாலவெவ, பமுணுவ; விஸ்தீரணம் : 0.0153 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம்

அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு யடவத்த பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச்.எம்.எம்.சீ.பீ. ஹிந்தகொட,
பிரதேச செயலாளர்,
யட்டவத்த.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
யட்டவத்த,
2024, நவெம்பர் 29.

EOG 12 - 0044

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DIK/LAN/02/34.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2030/32 ஆம் இலக்க மற்றும் 2017.08.02 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட மு.பி.மாறை 2692 காணித் துண்டு இல. 120, ஹீரளு தெனிய மற்றும் தன்கஹஇரிகொந்த எனும் காணித் துண்டின் விஸ்தீரணம் 0.0607 ஹெக்டயார் என அந்த வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் காணியின் விஸ்தீரணம் 0.0604 ஹெக்டயார் எனத் திருத்தப்பட வேண்டும் என இத்தால் மூலம் அறிவிக்கிறேன்.

மதுமதீ எம். ரத்நாயக்க,
பிரதேச செயலாளர்,
திக்வல்லை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
திக்வல்லை,
2024, நவெம்பர் 05.

EOG 12 - 0045

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.